# ශ්‍රී ලංකා ප්‍රජාතාන්ත්‍රික සමාජවාදී ජනරජයේ ගැසට් පත්‍රය
# இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசு வர்த்தமானப் பத்திரிகை

අංක 1767 - 2012 ජූලි මස 13 වැනි සිකුරාදා - 2012.07.13

*1767 ஆம் இலக்கம் - 2012 ஆம் ஆண்டு யூலை மாதம் 13 ஆந் திகதி வெள்ளிக்கிழமை*

*(அரசாங்கத்தின் அதிகாரத்துடன் பிரசுரிக்கப்பட்டது)*


## பகுதி IV (ஆ) - உள்ளூராட்சி

**(ஒவ்வொரு மொழியின் ஒவ்வொரு பகுதியும் வெவ்வேறாக கோவை செய்து வைப்பதற்காகத் தனித்தனிப் பக்கங்கள் தரப்பட்டுள்ளன.)**


| | பக்கம் |
|---|---|
| பதவிகள் - வெற்றிடம் | - |
| பரீட்சைகளும் பரீட்சைப் பெறுபேறுகளும் பிறவும் | - |
| உள்ளூராட்சி அறிவித்தல்கள் | 1058 |
| துணைவிதிகள் | 1059 |
| உள்ளூர் அதிகாரசபைகள் தேர்தல்கள் கட்டளைச் சட்ட அறிவித்தல்கள் | - |
| வரவு செலவுக் கூற்றுகள் | - |
| வரவு செலவு திரட்டுகள் | - |
| ஆதன விற்பனைகள் | - |
| ஆயவிற்பனையும் குத்தகையும் | - |
| வீதிச் செயற்குழுவின் அறிவித்தல்கள் | - |
| நானாவித அறிவித்தல்கள் | - |


### வாராந்த வர்த்தமானிகளிற் பிரசுரிப்பதற்கான அறிவித்தல்கள் ஏற்றுக்கொள்ளல் சம்பந்தமான

### முக்கிய அறிவித்தல்கள்

இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசு வாராந்த வர்த்தமானப் பத்திரிகைகளின் இறுதியில், ஒவ்வொரு மாதத்தின் முதல் வாரத்தின், வாராந்த வர்த்தமானப் பத்திரிகைகளில் பிரசுரிக்கப்படுவதற்கான அறிவித்தல்கள் ஏற்றுக்கொள்ளப்படும் இறுதித் திகதியும் நேரமும் சம்பந்தமான அறிவித்தல்களுக்கு கவனம் கோரப்படுகின்றது.

வாராந்த வர்த்தமானிகளிற் பிரசுரிக்கப்படுவதற்கான அறிவித்தல்கள் ஏற்றுக்கொள்ளப்படும் இறுதித் தினம் அவை **வர்த்தமானியில் பிரசுரமாகும் திகதிக்கு இரண்டு வாரங்களுக்கு முந்திய வெள்ளிக்கிழமை, நண்பகல் 12.00 மணியாகும்.** இறுதித் திகதியும் நேரமும் குறிப்பிடும் அறிவித்தல்களான, பதவி-வெற்றிடங்கள் மற்றும் பரீட்சைகளுக்கு விண்ணப்பம் கோரும் அறிவித்தல்கள், கேள்விப்பத்திர அறிவித்தல்கள் அத்துடன் ஏல விற்பனைத் திகதியும் நேரமும் குறிப்பிடும் அறிவித்தல்கள் என்பன அவ்வவ் அறிவித்தல்களில் உள்ள விடயங்களில் அக்கறை செலுத்துவோர் ஆக்கபூர்வமாக பயனுறும் வகையில் அவை பிரசுரிக்கப்படுவதற்காக அரசாங்க அச்சகத்துக்கு அனுப்பிவைக்கப்படும் திகதியிலிருந்தும் அத்துடன் அவை பிரசுரமாகும் திகதியிலிருந்தும் போதிய கால அவகாசம் கொண்டதாக தயாரிக்கப்பட்டு அனுப்பிவைக்கப்பட வேண்டும் என சகல அரசாங்க திணைக்களங்கள், கூட்டுத்தாபனங்கள், சபைகள் ஆகியன அறிவுறுத்தப்படுகின்றன. அறிவித்தல்கள் தொடர்பிலான பிழைதிருத்தங்கள் சம்பந்தமாக செய்யப்படும் முறைப்பாடுகள் மற்றும் விசாரணைகள் என்பன வர்த்தமானியில் குறிப்பிட்ட அறிவித்தல்கள் பிரசுரமாகிய திகதியிலிருந்து மூன்று மாதங்கள் கழிந்த பின்னர் ஏற்றுக்கொள்ளப்படமாட்டா என்பதனை கவனத்திற்கொள்ளவும்.

வர்த்தமானப் பத்திரிகையில் பிரசுரமாகும் சகல அறிவித்தல்களும், அவை பிரசுரமாகும் திகதிக்கு **இரண்டு வாரங்களுக்கு முன்னர்**, அதாவது 2012, ஓகத்து மாதம் 03 ஆந் திகதி வெள்ளிக்கிழமை பிரசுரிக்கப்படவேண்டிய அறிவித்தல்கள் 2012, யூலை மாதம் 20 ஆந் திகதி நண்பகல் 12.00 மணிக்கு அல்லது அதற்கு முன்னர் கிடைக்கக்கூடியவாறு தபால் மூலம் அல்லது நேரில் சேர்ப்பிக்கப்பட வேண்டும்.

**பி. கே. எஸ். ரவீந்திர,**
அரசாங்க அழுத்தகர் (பதில்).

*அரசாங்க அச்சுத் திணைக்களம்,*
*கொழும்பு 8,*
*2012 ஆம் ஆண்டு யூன் மாதம் 23 ஆந் திகதி.*

# உள்ளூராட்சி அறிவித்தல்கள்

**ஊன்வினைஞர் கட்டளைச் சட்டம் (272 ஆம் அதிகாரம்)**

*7(2) ஆம் பிரிவின்கீழ் அறிவித்தல்*

*பின்வரும் அட்டவணையில் பெயர் குறிப்பிடப்பட்டுள்ளவர் மாட்டிறைச்சிக்கென மாடு அறுக்குமிடம் நடத்தவும், அவரது பெயருக்கு எதிரே குறிப்பிடப்பட்டுள்ள இடத்தில் மாட்டிறைச்சி விற்பனைக்கான கடையை நடத்துவதற்கெனவும் 2012 ஆம் வருடத்துக்கான அனுமதிப்பத்திரம் வழங்கும்படி விண்ணப்பித்துள்ளாரென ஊன் வினைஞர் கட்டளைச் சட்டம் (272 ஆம் அதிகாரம்) 7(2) பிரிவின் கீழ் இத்தால் அறிவிக்கப்படுகின்றது.*

*2. உடுநுவர பிரதேச சபையின் நிருவாக எல்லைக்குள் வசிக்கும் எவரேனும் குறித்த அனுமதிப்பத்திரம் வழங்குவதை எதிர்ப்பதாயின், உரிய காரணங்களைத குறிப்பிட்டு அதனை இந்த அறிவித்தல் வர்த்தமானியில் வெளியிடப்பட்டு பதினான்கு (14) நாட்களில் இணைப் பிரதிகளில் எனக்குக் கிடைக்கச் செய்தல் வேண்டுமென இத்தால் கேட்டுக்கொள்ளப்படுகின்றனர்.*

ஆர். எம். பந்துல செனவிரத்ன,
தலைவர்,
உடுநுவர பிரதேச சபை.

உடுநுவர பிரதேச சபை அலுவலகம்,
கெலிஓய.
*2012, யூன் 18 ஆந் திகதி.*

**அட்டவணை**

| தொடர் இல. | விண்ணப்பிப்பவர் பெயரும் முகவரியும் | இறைச்சி வியாபார நிலையம் அமைந்துள்ள இடம் | மாடு அறுக்கும் இடம் அமைந்துள்ள இடம் |
|---|---|---|---|
| 1. | திரு. முயினுதீன் மொஹமட் இக்பால் இல. 157, பெனிதெனிய, பேராதெனிய. | இல. 135, தவுலகல, ஹந்தெஸ்ஸ | 195/1, மாஹிங்கொட, ஹந்தெஸ்ஸ. |

7-297

---

**சேருவில பிரதேச சபை**

*1952 ஆம் ஆண்டின் 6 ஆம் இலக்க உள்ளூர் அதிகார சபைகள் (நியமத் துணை விதிகள்) சட்டம்*

*1952 ஆம் ஆணடின் 6 ஆம் இலக்க உள்ளூர் அதிகார சபைகள் (நியமனத் துணை விதிகள்) சட்டத்தின் 2 ஆம் பிரிவின் கீழ் வடக்கு கிழக்கு மாகாண சபையால் அதிகாரம் அளிக்கப்பட்டு சேருவில பிரதேச சபையால் ஏற்றுக்கொள்ளப்பட்ட கீழ்க்காணும் தீர்மானம் இத்தால் பிரசுரிக்கப்படுகிறது.*

டபிள்யூ. எம். என். பீ. வீஜேயசிங்க,
தலைவர்,
சேருவில பிரதேச சபை.

சேருவில பிரதேச சபை,
சேருநுவர,
2012.06.05.

**தீர்மானம்**

*1952 ஆம் ஆண்டின் 6 ஆம் இலக்க உள்ளூர் அதிகார சபைகள் (நியமனத் துணை விதிகள்) சட்டத்தின் 2 ஆம் பிரிவின் கீழ் 1987 ஆம் ஆண்டின் 15 ஆம் இலக்க பிரதேச சபைகள் சட்டத்தின் 122 மற்றும் 126 ஆம் பிரிவுகளுடன் 121 (அ) என்னும் பிரிவினால் அதிகாரமளிக்கப்பட்ட ஏற்பாடுகளுக்கிணங்க உள்ளூராட்சி வீடமைப்பு நிர்மாணத்துறை அமைச்சரால் ஆக்கப்பட்டு 1988, ஓகத்து மாதம் 23 ஆந் திகதிய 520/7 ஆம் இலக்க இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசின் அதிவிசேட உள்ளூராட்சி வர்த்தமானப் பத்திரிகையில் பிரசுரிக்கப்பட்டதும் வடக்கு, கிழக்கு மாகாண கௌரவ ஆளுநர் அவர்களால் தீர்மானிக்கப்பட்டு வடக்கு கிழக்கு மாகாண எல்லைக்குள் ஏற்புடையதென ஏற்றுக்கொள்ளப்பட்டு 1994, ஒற்றோபர் மாதம் 21 ஆந் திகதிய 842 ஆம் இலக்க இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசு வர்த்தமானப் பத்திரிகை "பகுதி IV (ஆ)" இல் பிரசுரிக்கப்பட்டதுமான நியமனத்துணை விதிகள் பாகம் I, பாகம் 2 இன் 1 தொடக்கம் 42 வரையிலான பிரிவுகள் சேருவில பிரதேச சபையின் அதிகார எல்லைக்குள் இத்தீர்மானம் இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசு வர்த்தமானப் பத்திரிகையில் பிரசுரமாகும் திகதியில் இருந்து நடைமுறைப்படுத்துவதற்கு ஏகமனதாகத் தீர்மானிக்கப்பட்டது.*

*7-299*

# துணை விதிகள்

**தெரணியகலை பிரதேச சபை**

துணை விதிகள்

*1987 ஆம் ஆண்டின் 15 ஆம் இலக்க பிரதேச சபைகள் சட்டத்தின் 122 ஆம் பிரிவின் (1) ஆம் உட்பிரிவுடன் வாசிக்கவேண்டிய அச்சட்டத்தின் 69 ஆம் பிரிவின்/126 ஆம் பிரிவின்கீழ் பிரதேச சபைகளுக்கு அளிக்கப்பட்டுள்ள அதிகாரங்களின் பிரகாரம் தெரணியகலை பிரதேச சபையினால் ஒழுங்குசெய்யப்பட்ட கீழ்க்குறிப்பிட்டுள்ள துணைவிதிகள் 1989 ஆம் ஆண்டின் 12 ஆம் இலக்க மாகாண சபைகள் (இடைநேர்விளைவான ஏற்பாடுகள்) சட்டத்தின் 2 ஆம் பிரிவின் (1) ஆம் உட்பிரிவுடன் வாசிக்கவேண்டிய மேற்கூறிய பிரதேச சபைகள் சட்டத்தின் 123 ஆம் பிரிவின் (1) ஆம் உட்பிரிவினால் எனக்களிக்கப்பட்டுள்ள அதிகாரங்களின் பிரகாரம் சப்ரகமுவ மாகாணத்தின் மாகாண சபையின் உள்ளூராட்சி விடயம் பொறுப்பான அமைச்சராகிய என்னால் அங்கீகரிக்கப்பட்டுள்ள என்பதையும் இவ்வறிவித்தல் வர்த்தமானப் பத்திரிகையில் பிரசுரிக்கப்படும் திகதி தொடக்கம் மேற்கூறிய துணைவிதிகள் தெரணியகலை பிரதேச சபையின் அதிகாரப் பிரதேசத்திற்குள் செயற்படும் என்பதையும் இத்தால் அறிவிக்கப்படுகின்றது.*

மஹீபால ஹேரத்,
உள்ளூராட்சி விடயம் பொறுப்பான அமைச்சர்,
சப்பிரகமுவ மாகாணம்.

சப்பிரகமுவ மாகாண சபை,
புதிய நகரம்,
இரத்தினபுரி.
*2012.06.11.*

**தெரணியகலை பிரதேச சபைக்குச் சொந்தமான வீதிகளின் பாவனையை முறையாக நிர்வகித்தலுக்கான துணைவிதிகள்**

இந்த துணைவிதியானது, தெரணியகலை பிரதேச சபைக்கு உட்பட்ட வீதிகளின் வாகன போக்குவரத்தை முறையாக நிர்வகித்தலுக்கான யாப்பு என அழைக்கப்படும் யாப்பாகும்.

2. தெரணியகலை பிரதேச சபையின், பிரதேச சபைக்குரிய வீதிகள் என கூறப்படுகின்றது. வேறு அதிகார சபைகளுக்கு உட்படாத பிரதேச சபையின் அதிகார எல்லைக்குள் அமைந்துள்ள வீதிகளில் பாரம் கூடிய வாகனங்களின் போக்குவரத்தை முறையாகப் பேணுதல், கட்டுப்படுத்தல், பாதைகளுக்கு ஏற்படும் சேதனைகளை குறைத்தல் என்பன இந்த யாப்பை நடைமுறைப்படுத்துவதன் நோக்கமாகும்.

3. இந்த துணைவிதியானது அரசாங்க வர்த்தமானியில் பிரசுரிக்கப்படும் திகதியிலிருந்து நடைமுறைக்கு கொண்டுவரப்படும்.

4. (i) இதன் பின்னர் பிரதேச சபை தலைவரினால் வழங்கப்பட்ட பிரிவு ஒன்றில் குறிப்பிடப்படும் கட்டணத்தைச் செலுத்தி பெற்றுக்கொண்ட அனுமதிப்பத்திரத்தை வைத்திருந்தால் ஒழிய மேலே யாப்பின் இரண்டாம் பிரிவில் குறிப்பிடப்படும் வீதியொன்றில் இரண்டு தொன்னுக்கு அதிகமான பாரம் கொண்ட டிபர் வாகனம், ட்ரெக்டர், வீதி செப்பனிடும் இயந்திரங்கள் போன்றவற்றை கொண்டுசெல்லல். அல்லது கல், மணல் போன்ற கட்டுமான பொருட்களை அல்லது வேறு வகையான மூலப்பொருட்களை அல்லது இறப்பர் உற்பத்தியுடன் தொடர்புடைய பொருட்களைக் கொண்டுசெல்லல் முடியாது.

(ii) இவ்வீதியொன்றில் மிருகங்களைப் பயன்படுத்தி, அல்லது உழவு இயந்திரம் மூலம், மரக்கட்டைகளை அல்லது வேறு பொருட்களை இழுக்கச் செய்தல் அல்லது இழுத்துச் செல்லல் கூடாது.

(iii) காற்று நிரம்பிய டயர் அல்லாத வேறு எந்த வாகனத்தையும், வேறு வாகனமொன்றில் ஏற்றிச் செல்லலாம் ஒழிய, பிரதேச சபைக்குச் சொந்தமான எந்த வீதிகளிலும் ஓட்டிச்செல்லல் கூடாது.

5. (i) யாரேனும் இந்த யாப்பின் இரண்டாம் பந்தியில் தெளிவுபடுத்தப் பட்டிருக்கும் வீதியொன்றில் ஏதேனும் கட்டிட நிர்மாண பொருட்களை, விவசாய உற்பத்திப் பொருட்கள், மரங்களை அல்லது இயந்திரங்களை கொண்டுசெல்வதாயின் அதற்கான முதலாவது உப அறிக்கையில் குறிப்பிடப்படும் கட்டணத்தை பிரதேச சபைக்குச் செலுத்தி பிரதேச தலைவரிடம் பெற்றுக்கொண்ட அனுமதியின்றி கொண்டுசெல்ல முடியாது.

(ii) யாரேனும் இந்த யாப்பின் இரண்டாம் பந்தியில் தெளிவுபடுத்தப் பட்டிருக்கும் வீதியொன்றில் ஏதேனும் கட்டிட நிர்மாண பொருட்களை, விவசாய உற்பத்திப் பொருட்களை, மரங்களை அல்லது இயந்திரங் களைக் கொண்டுசெல்வதாயின், இதற்கான எழுத்துமூல விண்ணப்பம்

ஒன்றை பிரதேச சபை தலைவருக்கு ஆகக்குறைந்தது மூன்று நாட்களுக்கு முன்னர் சமர்ப்பிக்கப்பட வேண்டும்.

(iii) மேலே (05) (ii) உப பிரிவின்படி விண்ணப்பம் ஒன்று கிடைத்தவுடன் அது பிரதேச சபைத் தலைவரினால் தொழில்நுட்ப உத்தியோகத்தர் ஒருவருக்கு அல்லது பிரதேச சபைத் தலைவரினால் அதிகாரமளிக்கப்பட்ட வேறு உத்தியோகத்தர் ஒருவரிடம், அறிக்கையொன்றை கோர கட்டணத்தையும் சேதமேற்படக்கூடிய அளவுக்கு சமமான தொகையொன்றை முற்பணமாகப் பெற்றுக்கொள்ள வேண்டும்.

(iv) மேலே (05) (iii) பிரிவின்படி பின்னணியாக (முற்பணமாக) குறித்த தொகையை அறவிட்ட பின்னர் ஒப்பந்தம் ஒன்றிற்கு வந்தாலே ஒழிய குறித்த அனுமதி வழங்கப்படக்கூடாது.

(v) மேலே (05) (iv) உப பிரிவின்படி பெற்றுக்கொள்ளப்படும் பிணைப்பணம் (முற்பணம்) திருப்பித் தருமாறு கோரப்படும்போது முதலில் 10% திணைக்களக் கட்டணமும் பின்னர் சேதம் ஏற்பட்டிருந்தால் அதன் நட்டத்தையும் மதிப்பீடு செய்துகொள்ள வேண்டும்.

(vi) சேதம் முற்பணத் தொகையைவிட அதிகமாகக் காணப்படின் அம்மேலதிக பணத்தையும் செலுத்துமாறு குறித்த நபருக்கு கட்டளையிடல் சட்டத்திற்குட்பட்டதாகும். அதேபோல் மீதிப்பணத்தையும் செலுத்துமாறு கோரியும் குறித்த கட்டணத்தை செலுத்தத் தவறுமிடத்து முறைப்படி நீதிமன்றத்தில் வழக்குத் தாக்கல் ஒன்று செய்து மீதிப்பணத்தைப் பெற்றுக்கொள்ளக்கூடிய அதிகாரம் பிரதேச சபைக்கு உண்டு.

(vii) பிரதேச சபையுடன் அபிவிருத்தி வேலைகளுக்கு உரிய ஒப்பந்தங்களில் ஈடுபடுவதற்கு தயாராக உள்ள ஒப்பந்தக்காரர்கள் பிரதேச சபைத் தலைவருக்கு எழுத்துமூல விண்ணப்பத்தின் மூலம் முதலாம் உப பிரிவில் குறிப்பிடப்பட்டிருக்கும் கட்டணங்களில் இருந்து விடுவித்துக்கொள்ள முடியும்.

6. பிரதேச சபைத் தலைவர் அல்லது அவரது பிரதிநிதி மூலம் வழங்கப்படும் விசேட அனுமதிப்பத்திரத்தை முதலாவது உப பிரிவில் குறிப்பிடப்படும் தொகையை பிரதேச சபைக்குச் செலுத்திப் பெற்றுக்கொள்ள வேண்டும்.

7. இந்த துணைவிதியிற்கு அமைய விநியோகிக்கப்படும் அனைத்து அனுமதிப்பத்திரங்களையும் பரிசீலனை செய்யும் அதிகாரம் பிரதேச சபைத் தலைவருக்கு அல்லது செயலாளருக்கு அல்லது அவர்கள் இணைந்து நியமிக்கும் பிரதிநிதி மூலம் நடைமுறைப்படுத்தல் சட்டப்படி செல்லுபடியானதாகும்.

8. இந்த துணைவிதியில் உள்ளடக்கப்பட்டிருக்கும் எந்த ஒரு உப பிரிவையும் மீறுதல் அல்லது செயற்படுத்தாது விடுதல் குற்றமாகும். அதேவேளை யாராயினும் அல்லது செயற்படுத்தாது விடுதல் குற்றமாகும். அதேவேளை யாராயினும் அக்குற்றத்திற்கு நீதிமன்றத்தினால் குற்றவாளி எனத் தீர்மானிக்கப்பட்டிருந்தால் 1987 ஆம் ஆண்டின் 15 ஆம் இலக்க பிரதேச சபைச் சட்டத்தின் 122(2) உப பிரிவில் குறிப்பிடப்பட்டிருக்கும் தண்டத்திலும் மீண்டும் மீண்டும் அதே குற்றத்தினை செய்வாராயின் அவர் சட்டத்தை மீறியதை கவனத்தில் கொண்டு பிரதேச சபைத் தலைவர் அல்லது செயலாளர் அல்லது அவர்கள் இருவரும் இணைந்து நியமிக்கும் பிரதிநிதி மூலம் எழுத்துமூல அறிவுறுத்தல் வழங்கப்பட்ட பின்னரும் அதே பிழையைச் செய்வாராயின் அவ்வாறு தவறிழைக்கும் ஒவ்வொரு தினத்திற்கும் 1987 ஆம் ஆண்டின் 15 ஆம் இலக்க பிரதேச சபை சட்டத்தின் 122(2) ஆம் உப பிரிவின்கீழ் குறிப்பிடப்பட்டிருக்கும் மேலதிக தண்டப்பணத்தை செலுத்துவதற்கும் உட்பட வேண்டும்.

9. இந்த துணைவிதியை நடைமுறைப்படுத்தும்போது ஏற்படும் பிரச்சினைகளின்போது பிரதேச சபைத் தலைவர் எடுக்கும் முடிவே இறுதியானதாகும்.

10. இந்த துணைவிதியில் முதலாம் பிரிவில் குறிப்பிடப்பட்டிருக்கும் கட்டணத்தில் மாற்றத்தை ஏற்படுத்தும் அதிகாரம் தெரணியகலை பிரதேச சபைக்குரியதாகும்.

11. இந்த துணைவிதியின் ஏதேனும் சட்டதிட்டங்களின் விளக்கம் தொடர்பாக பிரச்சினைகள் ஏற்படின் அவ்வேளை சிங்கள மொழியில் குறிப்பிடப்பட்டிருக்கும் யாப்பே நடைமுறைப்படுத்தப்பட வேண்டும்.

12. இந்த துணைவிதியின் செயற்பாடுகளுக்காக பிரதேச சபை என தெரணியகலை பிரதேச சபையையும் பிரதேச தலைவர் என தெரணியகலை பிரதேச சபைத் தலைவரும் செயலாளர் என தெரணியகலை பிரதேச சபை செயலாளரும் அதிகாரம் அளிக்கப்பட்ட தெரணியகலை பிரதேச சபையின் உத்தியோகத்தர் ஒருவரும், கிராம உத்தியோகத்தரும், பொலிஸ் உத்தியோகத்தர் ஒருவரையுமே குறிப்பிடுகின்றது.

**முதலாம் உப பிரிவு**

1. மணல், மண் அல்லது வேறு கனிப்பொருட்களைக் கொண்டு செல்லல்–
   - 2 கியூப்புக்கு ரூபா 100
   - 3 கியூப்புக்கு ரூபா 150
   - 3 கியூப்புக்கு மேல் ஒவ்வொரு கியூப்புக்கும் ரூபா 50

2. விறகு, மூங்கில், போக்குவரத்திற்கு ஒரு தடவைக்கு ரூபா 500
   மரக்கட்டை கொண்டுசெல்வதற்கு ஒரு தடவைக்கு ரூபா 1,000
   கட்டுமானப் பணி இயந்திரங்கள் (சங்கிலி ரோதை அற்ற) போக்குவரத்துக்கு ஒரு தடவைக்கு ரூபா 1,500

3. விவசாய உற்பத்தி போக்குவரத்துக்கு–
   (1) தினசரி அல்லது மாதமொன்றில் 5 நாட்களுக்கு மேல் ரூபா 200
   (2) தினசரி அல்லாத அல்லது 5 நாட்களுக்கு அதிகமென்றால் ரூபா 100

7-433

---

## எட்டியாந்தோட்டை பிரதேச சபை

### துணை விதிகள்

1987 ஆம் ஆண்டின் 15 ஆம் இலக்க பிரதேச சபைகள் சட்டத்தின் 122 ஆம் பிரிவின் (1) ஆம் உப்பிரிவுடன் வாசிக்கவேண்டிய அச்சட்டத்தின் 69 ஆம் பிரிவின்/126 ஆம் பிரிவின்கீழ் பிரதேச சபைகளுக்கு அளிக்கப்பட்டுள்ள அதிகாரங்களின் பிரகாரம் எட்டியாந்தோட்டை பிரதேச சபையினால் ஒழுங்குசெய்யப்பட்ட கீழ்க்குறிப்பிட்டுள்ள துணைவிதிகள் 1989 ஆம் ஆண்டின் 12 ஆம் இலக்க மாகாண சபைகள்

(இடைநேர்விளைவான ஏற்பாடுகள்) சட்டத்தின் 2 ஆம் பிரிவின் (1) ஆம் உட்பிரிவுடன் வாசிக்கவேண்டிய மேற்கூறிய பிரதேச சபைகள் சட்டத்தின் 123 ஆம் பிரிவின் (1) ஆம் உட்பிரிவினால் எனக்களிக்கப்பட்டுள்ள அதிகாரங்களின் பிரகாரம் சப்ரகமுவ மாகாணத்தின் மாகாண சபையின் உள்ளூராட்சி விடயம் பொறுப்பான அமைச்சராகிய என்னால் அங்கீகரிக்கப்பட்டுள்ளன என்பதையும் இவ்வறிவித்தல் வர்த்தமானப் பத்திரிகையில் பிரசுரிக்கப்படும் திகதி தொடக்கம் மேற்கூறிய துணைவிதிகள் எட்டியாந்தோட்டை பிரதேச சபையின் அதிகாரப் பிரதேசத்திற்குள் செயற்படும் என்பதையும் இத்தால் அறிவிக்கப் படுகின்றது.

மஹீபால ஹேரத்,
உள்ளூராட்சி விடயம் பொறுப்பான அமைச்சர்,
சப்பிரகமுவ மாகாணம்.

சப்ரகமுவ மாகாண சபை,
புதிய நகரம்,
இரத்தினபுரி.
2012.06.11.

**எட்டியாந்தோட்டை பிரதேச சபை**

தகனம் செய்யுமிடத்தினை நடாத்துவதற்கான துணைவிதிகள்

இத்துணைவிதி எட்டியாந்தோட்டை பிரதேச சபைக்குச் சொந்தமான ஹாமன்த பொது மயானத்தில் அமைந்துள்ள தகனம் செய்யுமிடத்தில் சவங்களைத் தகனம் செய்தல், கட்டணங்களை விதித்தல், கட்டணங்களை அறவிடுதல் மற்றும் தகனம் செய்யுமிடத்தின் நிர்வாகத்தினை ஒழுங்குபடுத்தல் பற்றிய துணைச் சட்டம் என அறிமுகப்படுத்தப் படுகின்றது.

2. எட்டியாந்தோட்டை பிரதேச சபையின் தலைவரினால் அல்லது அவரினால் அதிகாரமளிக்கப்பட்ட அலுவலர் ஒருவரினால் வழங்கப்படுகின்ற அனுமதிப்பத்திரம் இன்றி சபைக்குச் சொந்தமான தகனம் செய்யுமிடத்தில் எந்தச் சவத்தினையும் தகனம் செய்தல் கூடாது.

3. இங்கு இரண்டாம் துணைவிதியில் குறிப்பிடப்பட்டுள்ள அனுமதிப்பத்திரமொன்றினை பெற்றுக்கொள்ள எதிர்பார்க்கின்ற (இங்கு இதன் பின் விண்ணப்பதாரர் எனக் குறிப்பிடப்படுகின்ற) ஒரு நபரினால் இங்கு முதலாம் அட்டவணைக்கு ஏற்ப தயாரிக்கப்பட்ட விண்ணப்பப்படிவமொன்றினை கீழே குறிப்பிடப்பட்டுள்ள ஆவணங்களுடன் தலைவருக்கு ஒப்படைத்தல் வேண்டும் :

(i) மரணித்தவர் வசித்து வந்த கிராம அலுவலர் பிரிவின் கிராம அலுவலரினால் வழங்கப்பட்ட சான்றிதழொன்று ;

(ii) மரணித்த நபரின் மரணம் சம்பந்தமாக குற்றவியல் சட்டத்தின் ஏற்பாடுகளின்கீழ் விசாரணையொன்று நடாத்தப்பட்டி ருந்தால் விசாரணையை மேற்கொண்ட மரண விசாரணை அதிகாரியினால் பிறப்பு மற்றும் மரணங்களைப் பதிவுசெய்யும் சட்டத்தின் 41(இ) பிரிவின்கீழ் சவத்தினை தகனம் செய்வ தற்கான அனுமதி வழங்கி வழங்கப்பட்ட சான்றிதழொன்று ;

(iii) பிறக்கும்போதே மரணித்துப் பிறந்த சவமொன்றாக இருந்தால் பிறப்பு மற்றும் மரணப் பதிவுச் சட்டத்தின் 43(1) பிரிவின்கீழ் வழங்கப்பட்ட சான்றிதழ் ;

(iv) பூர்த்திசெய்யப்பட்ட விண்ணப்பப்படிவத்தினைத் தலைவரிடம் ஒப்படைத்ததன் பின் கிடைக்கின்ற ஒழுங்கிற்கேற்ப ஆவணப்படுத்தப்படுதல் வேண்டும் ;

(v) சவத்தினைத் தகனம் செய்வதற்காக பொறுப்பேற்பதாக இருந்தால் அதற்காக விதிக்கப்பட்டுள்ள கட்டணத்தினை அறவிட்டு அனுமதிப்பத்திரமொன்றினை விண்ணப்பதாரிக்கு வழங்குதல் வேண்டும். தகனம் செய்யுமிடப் பொறுப்பாளரிடம் சவத்தினை ஒப்படைக்கவேண்டிய நேரத்தினை அனுமதிப் பத்திரத்தில் குறிப்பிடுதல் வேண்டும் ;

(vi) சவத்தினைத் தகனம் செய்வதற்காக பொறுப்பேற்காவிட்டால் அதுபற்றி அதற்கான காரணங்களுடன் விண்ணப்பதாரிக்கு எழுத்துமூலமாக அறிவித்தல் வேண்டும் ;

(vii) ஒவ்வொரு நாளும் மு. ப. 6.00 மணி முதல் பி. ப. 8.00 மணி வரையிலான கால எல்லையினுள் தகனம் செய்வதற்காக சவங்கள் பொறுப்பேற்கப்படும் ;

(viii) விண்ணப்பதாரர் அனுமதிப்பத்திரத்தில் குறிப்பிடப்பட்டுள்ள நேரத்திற்கு அல்லது அதற்கு முன்னர் சவத்தினைத் தகனம் செய்யுமிடப் பொறுப்பாளரிடம் ஒப்படைத்தல் வேண்டும். தாமதமாகி ஒப்படைப்பதன் மூலம் ஏற்பாடுகின்ற அசௌகரியங்கள் அல்லது நட்டங்கள் விடயமாக பிரதேச சபை பொறுப்புச் சொல்லாது ;

(ix) சபையில் சேவையாற்றிய அல்லது சேவை செய்கின்ற எவரேனும் ஒரு தலைவர், உப தலைவர் அல்லது சபை உறுப்பினர் அல்லது சபை அலுவலர் அல்லது பணியாளரின் சவத்தினை தகனம் செய்வதற்காக கட்டணங்களை அறவிடுதல் கூடாது ;

(x) தகனம் செய்யுமிடத்தில் தகனம் செய்யப்படுகின்ற ஒவ்வொரு சவம் சம்பந்தமாகவும் விண்ணப்பதாரரின் பெயர் மற்றும் முகவரி, மரணித்தவரின் பெயர் மற்றும் அவர் மரணிப்பதற்கு முன்பு வசித்த இடத்தின் முகவரி மற்றும் விண்ணப்ப தாரருக்கும் மரணித்தவருக்குமிடையிலான தொடர்பு, தகனம் செய்யப்பட்ட திகதி மற்றும் நேரம் போன்ற விபரங்கள் தகனம் செய்யுமிடப் பொறுப்பாளரினால் ஆவணப்படுத்தப்படுதல் வேண்டும் ;

(xi) சவத்தினைத் தகனம் செய்து 7 நாட்கள் கழிவதற்கு முன் விண்ணப்பதாரர் அல்லது அவரினால் அதிகாரமளிக்கப் பட்ட முகவர் ஒருவர் அஸ்தியைப் பொறுப்பேற்றல் வேண்டும். குறித்த காலத்தினுள் பொறுப்பேற்கப்படாத அஸ்தியை எவ்விதத்திலேனும் அகற்றுவதற்கு தலைவருக்கு அதிகாரம் அளிக்கப்பட்டுள்ளது ;

(xii) தகனம் செய்யுமிடப் பொறுப்பாளரின் அல்லது தலைவரின் அனுமதியின்றி தகனம் செய்யுமிட வளவிற்குள் பிரவேசித்தல் கூடாது. இருந்தும் சவமொன்றினை தகனம் செய்வதற்காக அனுமதிப்பத்திரம் பெற்ற ஒருவருடன் வருகின்ற ஒரு ஆணிற்கு அல்லது பெண்ணிற்கு அதற்காக அனுமதி வழங்கப்பட்டுள்ள தாகக் கருதப்படும்.

(xiii) சவம் ஒன்றினைத் தகனம் செய்வதற்காக தகனம் செய்யுமிடத்திற்கு ஒப்படைத்ததன் பின் தகனம் செய்யும்போது அல்லது தகனம் செய்வதற்கு முன்பு தகனம் செய்யுமிடத்தின் இயந்திரங்களில் தொழில்நுட்பக் கோளாறு அல்லது

தடைப்படுவதன் மூலம் சவத்தினைத் தகனம் செய்வதற்கு இயலாது போனால் குறித்த சவத்தினை அடக்கம் செய்யும் அதிகாரம் சபையின் தலைவரினுடையதாகும்.

(xiv) தகனம் செய்யுமிட வளவினுள் அமைதி மற்றும் ஒழுக்கம் முறியும் விதத்தில் நடத்தல் அல்லது தகனம் செய்யுமிடப் பொறுப்பாளர் அல்லது அவரது உதவியாளர்களின் நடவடிக்கைகளுக்கு தடங்கல்களை ஏற்படுத்தல் அல்லது தகனம் செய்யுமிட வளவினுள் அலங்காரங்கள் செய்தல் கூடாததுடன் தகனம் செய்யுமிட வளவினுள் அமைந்துள்ள சபைக்குச் சொந்தமான சொத்துக்களுக்கு நட்டங்கள் ஏற்படுத்தப்பட்டால் குறித்த நட்டத்தினை அதிகாரமளிக்கப் பட்ட சபை அலுவலர் ஒருவர் மூலம் மதிப்பீடு செய்து அந்த நட்டத்தினை அறவிட்டுக் கொள்வதற்கு நடவடிக்கை எடுக்கப்படும் ;

(xv) இத்துணைவிதியில் உள்ளடங்கியிருக்கின்ற ஏதேனும் ஒரு துணைச்சட்டத்தினை மீறுதல் அல்லது செய்யாது விடுதல் தவறாவதுடன் எவரேனும் ஒரு நபர் குறித்த நீதி அதிகாரமுள்ள நீதிமன்றமொன்றின் மூலம் தவறிற்குக் குற்றவாளியாகுமிடத்து மற்றும் அத்தவறினைத் தொடர்ந்தும் புரிகின்ற சந்தர்ப்பத்தில் 1987 ஆம் ஆண்டின் 15 ஆம் இலக்க பிரதேச சபைச் சட்டத்தின் 122 (2) உப பிரிவின் மூலம் விதிக்கப்பட்டுள்ள தண்டங்களுக்கு உட்படுதல் வேண்டும் ;

(xvi) சவங்களை தகனம் செய்வதற்கு உகந்த நிலையில் தகனம் செய்யுமிடத்தினைப் பராமரித்தல் பிரதேச சபையின் கடமையாவதுடன் தகனம் செய்யுமிடம் பராமரிப்பு, புதிய நிர்மாணம் என்பவற்றிற்காக ஏதேனும் ஒரு காலத்தினுள் மூடிவைக்கப்படுமானால் அதுபற்றிய அறிவித்தலை தகனம் செய்யுமிடத்தில் தெளிவாகத் தெரிபடக்கூடிய ஒரு இடத்தில் மற்றும் சபை அலுவலக அறிவித்தல் பலகையில் காட்சிக்கு வைத்தல் தலைவரின் கடமையாகும்.

(xvii) சவங்களை தகனம் செய்வதற்காக அறவிடப்படவேண்டிய கட்டணங்களை பிரதேச சபையில் பிரேரணை அங்கீகாரம் மூலம் வருடாந்தம் விதிக்கலாம். அவ்வாறு விதிக்கப்படுகின்ற கட்டணங்களை பிரதேச சபை தேவை எனக் கருதுகின்ற சந்தர்ப்பங்களில் திருத்தங்கள் செய்யலாம்.

(xviii) சொற்கள் சம்பந்தமாக தேவைப்பட்டால் இங்கு ''சபை'' என்பது எட்டியாந்தோட்டை பிரதேச சபை எனப் பொருள்படும். ''தலைவர்'' என எட்டியாந்தோட்டை பிரதேச சபைத் தலைவர் அல்லது தலைவரின் அதிகாரங்களை மற்றும் நடவடிக்கைகளை நிறைவேற்றுவதற்காக ஏதேனும் எழுத்துமூலமான சட்டமொன்றின் மூலம் அல்லது அதன்கீழ் அதிகாரங்கள் வழங்கப்பட்டுள்ள ஒரு நபரும் உள்ளடங்கப் படுவார். ''தகனம் செய்யுமிடப் பொறுப்பாளர்'' என்பவர் எட்டியாந்தோட்டை பிரதேச சபைக்குச் சொந்தமான தகனம் செய்யுமிடத்தின் பொறுப்பாளராகக் கடமையாற்றுவதற்கு நியமிக்கப்பட்டுள்ளவர் எனப் பொருள்படும். ''சவம்'' என்பது ஒரு மனிதரின் சவம் அல்லது சவத்தின் ஒரு பகுதி அல்லது இறந்து பிறந்த ஒரு சவத்தினையும் குறிக்கும்.

(xix) இத்துணைவிதியில் தமிழ் மற்றும் ஆங்கிலப் பிரதிகளில் பொருள் விடயமாக ஒவ்வாமை ஏற்பட்டால் சிங்களப் பிரதி செல்லுபடியானதாகும்.

எட்டியாந்தோட்டைப் பிரதேச சபையின் தகனம் செய்யுமிடத்தில் சவத்தினை தகனம் செய்வதற்கான விண்ணப்பப்படிவம்

1. விண்ணப்பதாரியின் பெயரும் முகவரியும் :----.
   (i) தேசிய அடையாள அட்டை இலக்கம் :----.
   (ii) கிராம அலுவலர் பிரிவு :----.

2. மரணித்தவரின் பெயர் :----.
   (i) வசித்த முகவரி :----.
   (ii) கிராம அலுவலர் பிரிவு :----.
   (iii) தேசிய அடையாள அட்டை இலக்கம் :----.

3. மரணித்தவருக்கும் விண்ணப்பதாரிக்கும் இடையிலான தொடர்பு : ----.

4. இறப்புச் சான்றிதழின் இலக்கமும் திகதியும் :----. (இறப்புச் சான்றிதழின் பிரதி இணைக்கப்படல் வேண்டும்)

5. இறப்பைப் பதிவுசெய்த இடாப்பின் பெயரும் முகவரியும் :----.

6. இறப்பு ஏற்பட்ட விதம் :----.

7. இறப்பு சம்பந்தமாக விசாரணை நடாத்தப்பட்டிருந்தால் குறித்த திகதியும் நேரமும் :----.

8. விசாரணை அலுவலரின் பெயரும் பதவியும் :----.

9. விசாரணை அலுவலரின் குறிப்பு :----.

10. சவத்தினைத் தகனம் செய்ய அனுமதி வழங்கப்படுகின்றதா ? : ----.

11. தகனம் செய்வதற்குத் தேவையான திகதியும் நேரமும் :----.

12. தகனத்தின் பின் அஸ்தியை வைப்பதற்காக பெயர் மற்றும் முகவரி எழுதப்பட்ட பாத்திரம் வழங்கப்பட்டுள்ளது/இல்லை :----.

மேலே குறிப்பிடப்பட்டுள்ள அனைத்து விடயங்களும் சரியானவை எனவும், உண்மையானவை எனவும் அத்தாட்சிப்படுத்துகின்றேன். சம்பந்தப்பட்ட சான்றிதழ்கள் இணைக்கப்பட்டுள்ளது.

----,
விண்ணப்பதாரரின் கையொப்பம்.

திகதி :----.

விடயப் பொறுப்பாளரின் சிபாரிசு :-

சவத்தினை தகனம் செய்ய அனுமதி வழங்கப்படுகின்றது/இல்லை.

தலைவர்,
எட்டியாந்தோட்டை பிரதேச சபை.

7-434

### அரநாயக்க பிரதேச சபை

துணை விதிகள்

1987 ஆம் ஆண்டின் 15 ஆம் இலக்க பிரதேச சபைகள் சட்டத்தின் 122 ஆம் பிரிவின் (1) ஆம் உட்பிரிவுடன் வாசிக்கவேண்டிய அச்சட்டத்தின் 69 ஆம் பிரிவின் / 126 ஆம் பிரிவின்கீழ் பிரதேச சபைகளுக்கு அளிக்கப்பட்டுள்ள அதிகாரங்களின் பிரகாரம் அரநாயக்க பிரதேச சபையினால் ஒழுங்குசெய்யப்பட்ட கீழ்க்குறிப்பிட்டுள்ள துணைவிதிகள் 1989 ஆம் ஆண்டின் 12 ஆம் இலக்க மாகாண சபைகள் (இடைநேர்விளைவான ஏற்பாடுகள்) சட்டத்தின் 2 ஆம் பிரிவின் (1) ஆம் உட்பிரிவுடன் வாசிக்கவேண்டிய மேற்கூறிய பிரதேச சபைகள் சட்டத்தின் 123 ஆம் பிரிவின் (1) ஆம் உட்பிரிவினால் எனக்களிக்கப்பட்டுள்ள அதிகாரங்களின் பிரகாரம் சப்ரகமுவ மாகாணத்தின் மாகாண சபையின் உள்ளூராட்சி விடயம் பொறுப்பான அமைச்சராகிய என்னால் அங்கீகரிக்கப்பட்டுள்ளன என்பதையும் இவ்வறிவித்தல் வர்த்தமானப் பத்திரிகையில் பிரசுரிக்கப்படும் திகதி தொடக்கம் மேற்கூறிய துணைவிதிகள் அரநாயக்க பிரதேச சபையின் அதிகாரப் பிரதேசத்திற்குள் செயற்படும் என்பதையும் இத்தால் அறிவிக்கப்படுகின்றது.

மஹீபால ஹேரத்,
உள்ளூராட்சி விடயம் பொறுப்பான அமைச்சர்,
சப்ரகமுவ மாகாணம்.

சப்ரகமுவ மாகாண சபை,
புதிய நகரம்,
இரத்தினபுரி.
2012.06.11.

### அரநாயக்க பிரதேச சபை

வாகனங்கள் நிறுத்தி வைத்தல், கட்டுப்படுத்தல் மற்றும் ஒழுங்கமைத்தலுக்கான துணைவிதிகள்

2010.01.22 ஆந் திகதிய 1638 ஆம் இலக்கத்தைக் கொண்ட வர்த்தமானி அறிவித்தலின் மூலம் பகிரங்கப்படுத்தப்பட்ட அரநாயக்க பிரதேச சபையின் வாகனங்களை நிறுத்திவைத்தல், கட்டுப்படுத்தல் மற்றும் ஒழுங்கமைத்தலுக்கான துணைவிதிகளுக்கு பின்வரும் திருத்தங்கள் இத்துடன் சேர்க்கப்படுகின்றன.

பின்வரும் துணைவிதிகள் புதிய துணைவிதிகளாகச் சேர்க்கப் படுகின்றன :-

(22) இந்தத் துணைவிதிகள் தமிழ் மற்றும் ஆங்கில மொழிகளில் அர்த்தம் வழங்கும்போது ஏதாவது தெளிவற்றுக்காணப்படின் அதனை சிங்கள மொழிமூல துணைவிதிகளுடன் ஒப்புநோக்குக.

அட்டவணை 1 இல் சிங்கள மொழிமூல பிரதிக்காக பின்வரும் இடம் இணைக்கப்படுகின்றது :-

| வாகனங்கள் நிறுத்தி வைப்பதற்கு ஒதுக்கப்பட்டுள்ள இடம் | முச்சக்கர வண்டி |
|---|---|
| கெசெல்வத்தை | பாடசாலை சந்தி அருகில் |

அட்டவணை 1 இல் ஆங்கில மொழிமூல பிரதிக்காக பின்வரும் இடம் இணைக்கப்படுகின்றது :-

| வாகனங்கள் நிறுத்தி வைப்பதற்கு ஒதுக்கப்பட்டுள்ள இடங்கள் | முச்சக்கர வண்டி |
|---|---|
| அம்பலகந்தை | அம்பலகந்தை பாடசாலை முன்னால், அரச மரத்தடியில் |
| தெவனகலை | தெவனகலை சந்தி, தெவனகலை ரஜமகா விகாரைக்கு திரும்பும் சந்தி |
| தெல்லக | தெல்லக சாமகம சந்திக்கு அருகில் |
| கால்வான | கால்வான புது மெதுர அருகில் |
| மில்லன்கொட | மில்லன்கொட அரச மரத்துக்கு அருகில் |
| மாலிகாதன்ன | மாலிகாதன்ன வித்தியாலயத்திற்கு அருகில் |
| கந்தேவத்த | கந்தேவத்த புலுகஹமுல அருகில் |

அட்டவணை 1 இல் தமிழ் மொழி மூல பிரதிக்காக பின்வரும் இடம் இணைக்கப்படுகின்றது :-

| வாகனங்கள் நிறுத்தி வைப்பதற்கு ஒதுக்கப்பட்டுள்ள இடங்கள் | முச்சக்கர வண்டி |
|---|---|
| மில்லன்கொட | மில்லன்கொட அரச மரத்தருகில் |
| மாலிகாதன்ன | மாலிகாதன்ன வித்தியாலயத்திற்கு அருகில் |
| கந்தேவத்த | கந்தேவத்த புலுகஹமுல அருகில் |

தலைவர்,
அரநாயக்க பிரதேச சபை.

பிரதேச சபை அலுவலகம்,
அரநாயக்க.

7-435

இலங்கை அரசாங்க அச்சுத் திணைக்களத்தில் பதிப்பிக்கப்பெற்றது.